**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.196/2024- PW-2**

| Name | திரு.மதியழகன் (எ) மதிவாணன் | District | வேலூர் |
|---|---|---|---|
| Father Name | திரு.தட்சிணாமூர்த்தி | Occupation | வியாபாரம் |
| Village /Area | செம்பராயநல்லூர் | Age | 40 |
| Taluk | காட்பாடி | Aadhar Card No. | 7656 1984 6626 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **09.02.2026.**

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதியும், அவரது வழக்கறிஞரும் அழைத்ததின் பேரில் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வந்தேன். வாதி என்னிடம் அடிக்கடி கடன் வாங்குவார். ஜனவரி 2024-ல் முதல் வாரத்தில் வாதி என்னிடம் கடன் வாங்கினார். அவர் என்னிடம் கடன் வாங்கியதற்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்திருந்தார். 2 மாதங்களில் அந்த கடன் தொகையை திரும்ப செலுத்திவிட்டு கடனுறுதி சீட்டை என்னிடமிருந்து திரும்ப பெற்று சென்றுவிட்டார். வாதிக்கும், எனக்கும் 10 வருடங்கள் பழக்கமுள்ளது. நான் செய்யும் இரும்பு வியாபாரத்திற்கு பெயர் எதுவும் இல்லை. ஒரு நிறுவனத்திலிருந்து பழைய இரும்பை வாங்கி மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றி கொடுப்பேன். பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்ததாக நான் சொல்லும் கடனுறுதி சீட்டில் அவர் சபீனா (எ) சபீனா பீ என கையெழுத்து போட்டுள்ளரா என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. நான் மதியழகன் (எ) மதிவாணன் என கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் மதியழகன் என கையெழுத்து போட்டுள்ளேன். எனக்கு மதியழகன் (எ) மதிவாணன் என்ற

பெயர் இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி கையெழுத்து போட்டுக்கொடுத்த கடனுறுதி சீட்டில் என்னுடைய முகவரி எழுதவில்லை. பிரதிவாதியை வாதிக்கு எவ்வாறு தெரியும் என்ற விவரம் எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டில் மற்றொரு சாட்சி கையெழுத்து போட்டுள்ள சாதீக் பாஷா என்பவரை பிரதிவாதி அழைத்து வந்தார். எங்கள் இருவரை தவிர மற்றொரு சாட்சியை வாதி அழைத்து வந்தார். கடனுறுதி சீட்டை வாதியின் மனைவிக்கு தெரிந்த ஒரு நபர் எழுதினார். அவருடைய பெயர் எனக்கு தெரியாது. நான் 28.01.2024–ம் தேதி காலை 9.30 மணிக்கு வாதி வீட்டிற்கு சென்றேன். பிரதிவாதியும், மற்ற சாட்சிகளும் அன்று காலை 10.00 முதல் 10.30 மணிக்குள் அங்கு வந்தார்கள். கடனுறுதி சீட்டை எழுதிய நபர் காலை 9.30 மணிக்கு வந்தார். அவரை வாதி அழைத்து வந்தார். வாதி கார் வாங்கி விற்கும் தொழிலுக்கு பெயர் வைக்கவில்லை. பிரதிவாதி என்ன காரணத்திற்காக கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. என்னிடமிருந்து வாதி பெற்ற கடன் தொகையை தான் பிரதிவாதிக்கு வாதி கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. வாதி அன்றைய தினம் எங்கிருந்து பணம் எடுத்து வந்தார் என்று எனக்கு தெரியாது. சாட்சி பாஸ்கர் வாதியின் நண்பர். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. வாதி என்னுடைய நண்பர் என்பதால் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும், பிரதிவாதி எப்போதும் வாதியிடம் கடன் வாங்கவோ, கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுக்கவோ இல்லை என்றாலும் சரியல்ல. சாதீக் பாஷா என்பவரை விசாரித்தால் நானும், மற்ற சாட்சிகளும் அங்கிருந்தோமா என்பது தெரியவரும் என்றால் சரிதான். நானும், வாதியும், வாதியின் நண்பர்களும் கூட்டு சேர்ந்து கடனுறுதி சீட்டை தயார் செய்து பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2026.02.09 16:58:39 -0500

I Additional District Judge,
Ranipet.